www.tamilarangam.net


# வண்ணை

*Vannai*

**GRATUIT**

இலவச சஞ்சிகை



தொடர்புகளுக்கு
Vannai Theivam
1, Allee Raoyl Duffy,
Bât. Bretagne
93420 Villepinte, France.




கலை இலக்கியச் செய்திகளைச் சுமந்து நினைத்த நேரத்தில் வெளிவரும் இலவச சஞ்சிகை!


# மறக்கமுடியவில்லை! மறக்கமுடியவில்லை!!

## ஒரு சமூக விடுதலைப் போராளியின்

# மறக்கமுடியாத மரணம்!



மரணம்! மனிதர்களாகப் பிறந்த அனைவர்க்கும் என்றோ ஒருநாள் இடம்பெறப்போகும் இறுதிச் சம்பவம்தான்! ஆனால் தனது மரண நாளை அறிந்து கொள்பவர்கள் ஆயிரத்தில் ஒருவராக .... இல்லை இல்லை இலட்சத்தில் ஒருவராகத்தான் இருக்கமுடியும்! அந்த இலட்சத்தில் ஒருவராக புஸ்ப்பராஜா அவர்களும் இடம்பெற்றுவிட்டார்!

இந்த புஸ்பத்தின் உடலில் இவ்வளவு பயங்கரமான முட்களா? நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை! இவர் கடந்து வந்த பாதையில் கிடந்தவையோ கணக்கற்ற முட்கள்! அப்போது அந்த முட்களைக் கடப்பதற்கான இளமையும் வலிமையும் மன உறுதியும் புஸ்ப்பராஜா அவர்களிடம் இருந்தன. ஆனால் இன்றோ விசாவே இல்லாமல் வெளிநாடுகளுக்குப் பயணிக்கின்ற மனங்களைப்போல புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்கின்ற அனேகமானவர்களுக்கு இலவசமாக வரக்கூடிய நோய்கள் எல்லாம் இவரிடமும் குடி புகுந்துள்ள இந்த வேளையில் கூடுதலாக கான்ஸர் என்ற இந்த கொடிய முள்ளுமா.......?

சுமார் நான்கு சகாப்தங்களுக்கு முன்னராகவே தமிழ் மக்களுக்கான விடுதலைப் பயணத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் மூலமாக தன்னை இணைத்துக்கொண்டு களங்களையும் சிறைகளையும் கண்ட இவரின் அரசியல்ச் செயற்பாடுகள் காலத்தால் மறந்துவிடக்கூடியவை அல்ல!

இவருடன் அரசியல் பயணத்தில் கப்பலேறியவர்களில் பலர் இன்று தங்களை வழப்படுத்திக்கொண்டு உயர்ந்த இடத்தில் இருக்கின்றார்கள்! ஆனாலும் தன்னை வழப்படுத்த முயலாது தமிழ் மக்களின் வழமான வாழ்விற்காக தனது வாழ்வின் இறுதி நாள்வரை ஏதோ ஒரு வகையில் செயல்பட்டுக்கொண்டிருந்தவர் என்பது இவரோடு ஒட்டி உறவாடியவர்கள் அறிந்த விடயமாகும். ஆனால் தமிழ் மக்களின் இலட்சியமான சுதந்திர தமிழ் ஈழம் கிடைப்பதற்கு முன்னராகவே புஸ்ப்பராஜா அவர்களை காலன் அழைத்துச் சென்றுவிட்டான்.

நண்பா உன்னோடு பழகிய நாட்கள்!..... நாம் உண்டு குடித்து மகிழ்ந்த நாட்கள்!.... இவையெல்லாம் மறக்கமுடியவில்லை! ஆம் மறக்கமுடியாத மனிதர்களில் நண்பர் புஸ்ப்பராஜாவும் ஒருவர்.

*நான் எந்த விடயத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மௌனியாக இருக்க விரும்பவில்லை! மௌனியாக இருக்கவேண்டிய அவசியமும் எனக்கில்லை. நான் கூறுவதான் சரியானது என்கின்ற பிடிவாதமும் என்னிடம் இல்லை. இவர்களுடன்தான் பேசுவேன் இவர்களுடன்தான் உறவு கொள்வேன் என்ற இறுமாப்பும் என்னிடம் இல்லை. துப்பாக்கி இல்லாத யாரிடமும் நான் எப்பொழுதும் பேசத் தயாராக உள்ளேன். நான் ஈழத்தை நேசிப்பவன். ஈழத்தை நேசிக்கும் மற்றொருவருக்கு அல்லது பலருக்கு எனது கருத்தின்மீது நடைமுறையின்மீது உடன்பாடில்லாமல் இருக்கலாம்.அதை நாங்கள் பேசித் தீர்க்கலாம். இதை புரிந்துகொள்ளாததால் நாங்கள் கொடுத்த விலை அதிகமானது.*

(ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற புஸ்ப்பராஜா அவர்களின் நூலில் இருந்து பக்கம்14)


2006ம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி வெளியிடப்பட்டது -இதழ் பதினெட்டு

www.tamilarangam.net



## வண்ண வரிகள்......

எங்களுடைய பண்பாடுகளில் ஒன்று மரணித்த மனிதர்களின் குறைபாடுகளை மறந்துவிடுவதும் அவர்களின் சிறப்புக்களை மட்டும் எடுத்துரைப்பதும் ஆகும். ஆனால் இப்பொழுது சில சந்தர்ப்பங்களில் மரணித்த சில மனிதர்களின் சிறப்புக்களைக் கூறுவதுகூட சிலருக்குப் பிடிப்பதில்லை!

ஆனால் அமரர் புஸ்ப்பராஜாவிடம் இருந்த மிகச் சிறந்த குணங்களில் ஒன்று மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு முகம் கொடுக்காது (அவர்கள் தனது உறவினர்களாக இருந்தாலும்கூட) நல்லதை நல்லது என்று பாராட்டுவதும் கெட்டவற்றை கெட்டது என்று சுட்டிக்காட்டுவதுமாகும்

இப்படியாக நான் சம்பந்தப்பட்ட சில விடயங்களையும் நான் சம்பந்தப்படாத அறிந்த சில விடயங்களையும் இங்கு ஆங்காங்கே பதிய வைத்துள்ளேன்.

இதைநான் இங்கு சொல்லவேண்டும் என்ற அவசியமே இல்லை! புஸ்ப்பராஜா அவர்கள் எழுதிய "ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்" என்ற நூலை முழுமையாகப் படித்தால் புரிந்துகொள்ளலாம்.

அமரர் புஸ்ப்பராஜா அவர்களின் மரணம் பற்றிய செய்தி அவருடைய நண்பர்கள் உறவினகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும் புஸ்ப்பராஜாவைப் பொறுத்தவரை அவருக்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தியதாக என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லை! அதே நேரத்தில் அவருடைய உள் மனதினில் வேறு விதமான சில பாதிப்புக்கள் இருந்திருக்கலாம் என்பதையும் நண்பர்கள் சிலருடன் உரையாடும்போது உணர்ந்து கொண்டேன்

அண்மையில் அறிவாலயம் புத்தகாசலை உரிமையாளர் திரு சிவதாஸ் அவர்களின் துணைவியார் திருமதி மோகனா அவர்களுடன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தபோது இந்த மரணம் பற்றி அவர் கூறிய சில கருத்துக்களில் உள்ள உண்மைகள் நியாயங்கள் திரும்பவும் திரும்பவும் எனது மனதினில் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றது. அவர் கூறியதாவது......

"மதிற்பிகுரிய திரு புஸ்பராஜண்ணன் அவர்களின் மறைவு ஒரு புறத்தில் வேனையைத் தந்தாலும் மறு புறத்தில் இந்த மரண சம்பவம் என் மனதில் பெரும் வியப்பையும் ஏற்படுத்துகின்றது!

தள்ளாத வயது வந்து படுக்கையில் கிடந்து அழுந்துகின்ற நேரத்தில்கூட மனிதர்கள் அனைவருமே அந்த மரணத்தைத் தள்ளி வைக்க முடியாதா என்றும் அதற்காக உயர்ந்த வைத்தியத்தை நாடுவதும் பணத்தை தாராளாமக செலவு செய்வதற்கும் தயாராக இருப்பதையும் நாம் கண்கூடாக காண்கின்றோம் இது உயிரின் மேல் உள்ள ஆசையின் விருப்பு

ஆனால் புஸ்ப்பராஜண்ணன் அவர்கள் தனது வாழ்வின் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தவர் ஆனாலும் தனது இறுதிநாள் வரையும் யாருக்கும் பாரமாக இருக்கவில்லை தன்னுடைய கடமைகளை தானே செய்துகொண்டிருந்தார் சுருங்கச் சொல்வதானால்

தன்னை யாரும ஒரு நோயாளி என்ற கோணத்தில் நோக்குவதை அவர் விரும்பவே இல்லை என்பதுதான் உண்மை.

புஸ்ப்பராஜா தம்பதிகளுடைய நாற்பது வருட தாம்பத்திய வாழ்க்கையிலே எத்தனையோ விதமான ஊடல்கள் சந்தோசங்கள் கருத்து வேறுபாடுகள் எல்லாம் வந்து போயிருக்கலாம் ஆனால் அந்த கடைசி நாற்பது நாட்களும் அந்த தம்பதிகளின் மனங்களில் எவ்வளவு வேதனைகள் ஏற்பட்டிருக்கும்?

கணவர் நினைத்திருப்பார் "என் மனைவியின் எல்லா ஆசைகளையும் நான் நிறைவேற்றியிருக்கின்றேனா? அல்லது ஏதாவது குறைவைத்திருக்கின்றேனா?" என எண்ணியிருக்கலாம். அதேபோல மனைவியும் எண்ணியிருக்கலாம் "எப்போதாவது நான் எனது கணவரின் சந்தோசங்களுக் குறுக்கேயிருந்து அவரது மனதை சங்கடப்படுத்திய இருப்பேனோ? அல்லது இன்னும் கூடுதலாக அவரின் உடல் நலத்தில் அக்கறை எடுத்திருந்தால் இந்த துயர சம்பவத்தை தடுத்திருக்கலாமோ?" இப்படியாக இரண்டு பேர்களுமே அந்த கடைசி நாற்பது நாட்களிலும் தேவையில்லாத கற்பனைகளால் தங்களைத் தாங்களே வருத்தியிருப்பார்கள். இது ஒருவரின் மரணத்தின் நாளை தெரிந்து கொண்டால் எவருக்கும் ஏற்படக்கூடிய சாதாரண உணர்வுகள்தான்.

ஆனால் புஸ்ப்பராஜண்ணனின் இந்த நிலை அறிந்து நான் தொலைபேசியில் அவருடன் உரையாடும்போது தனது மரணம் பற்றிய எந்த ஒரு அறிகுறியும் காட்டாது முன்னர் எப்படி என்னுடன் உரையாடுவாரோ அப்படியேதான் அன்றும் உரையாடினார்"

திருமதி மோகனா-சிவதாஸ் அவர்கள் கூறிய இந்தக் கருத்துக்ள் இன்னமும் எனது மனதினில் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றது

நான் நினைக்கின்றேன் மரணதின் நாளை ஒவ்வொரு மனிதர்களும் தெரிந்துகொண்டு வாழ்ந்தால் இன்னும் இவ்வளவு நாட்கள்தானே வாழப்போகின்றேன் என எண்ணி வாழப்போகின்ற அந்த நாட்களை சந்தோசமாகக் கழிக்கலாம் என் எண்ணி எல்லோரும் பகை சண்டை சச்சரவுகள் இன்றி சந்தோசமாக வாழ்வதற்குரிய காலமாற்றம் உருவாகலாமோ என்று.........

அமரர் புஸ்ப்பராஜா அவர்கள் தனது இறுதி நாட்களில் அப்படித்தான் அப்படித்தான் வாழ்ந்திருக்கின்றார்.

*தமிழர்கள் இன்று நடாத்துவது சம உரிமைப் போராட்டமோ சலுகைப்போராட்டமோ தரப்படுத்தல் வேலை வாய்ப்புக்கான போராட்மோ அல்ல? இது சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கான விடுதலைப் போராட்டம் என்ற கருத்தை எமது மக்கள் மத்தியில் முன் வைத்து போராட்டத்தை முனைப்படுத்தியவர்கள் நாங்களே. வடக்கு கிழக்கு மக்களுக்கு நிகரான உரிமையுடையவர்கள் மலையக மக்கள் என்ற கருத்தை மட்டுமல்ல மலையக மக்களும் போராட்டத்தில் எம்முடன் இணையவேண்டும் இந்தப் போரில் அவர்களுக்கும் சம பங்குண்டு என்புத போன்ற ஆணித்தரமான கருத்துக்களைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் முனைப்படுத்தியவர்களும் நாங்களே.*

*(ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் பக்கம் -131)*

www.tamilarangam.net



## பொறு என்று ஒரு கையை காலனுக்குக் காட்டி......
## மறு கையை எம்மோடு இறுகப் பற்றி...............

ஒரு கையை அசைக்கின்றார் "வருகின்றேன் கொஞ்சம் பொறு" என்று காலனுக்கு சொல்வது போல.....

மறு கையை எம் கைகளுடன்டன் இறுகப் பற்றி சிரித்த முகத்துடன் எம்மிடம் இருந்த விடைபெற்ற அபூர்வ மனிதர் அமரர் புஸ்ப்பராஜா அவர்கள்!

புலம்பெயர் வாழ்வில் நான் தேடிய நிறைய நண்பர்கள் இன்றும் என் நெஞ்சுக்குள் இருக்கின்றார்கள். அவர்களுள் முதன்மையிடத்தில் இருப்பவர்களில் நண்பர் புஸ்ப்பராாவும் ஒருவர்.

அதற்கு முக்கிய காரணம் பொது வாழ்க்கையில் நாங்கள் வேறு வேறு திசைகளில் இருந்தாலும் நன்மை தின்மையான நிகழ்வுகளில் சந்திக்கும்போது இறுகக் கரம் பற்றி இனிக்க இனிக்க பேசிக்கொள்வோம்.

தனிப்பட்ட தனது கருத்துக்களை விமர்சனங்களை எமது நட்புக்கு மத்தியில் அவர் என்றுமே திணித்ததில்லை! அதனால்த்தான் இன்றுவரை எமது நட்பு ஆழமாக நீடித்தது.......

இனி வரப்போகின்ற இன்ப துன்ப நாட்களில் புஸ்ப்பராஜா அவர்கள் இல்லாத இடம் எமக்கெல்லாம் தாங்கமுடியாத துயரமான வெற்றிடமாகவே இருக்கும்.

என்னைப் பொறுத்தவரையில் உண்மையில் புனிதமான ஒரு உறவுக்குள் ஊண்டி வாழவேண்டுமென எண்ணுகின்றவர்களுக்கு இவரது பழகுமுறை சிறந்த ஒரு முன் உதாரணமாகும்.

மனித வாழ்க்கையிலே தடுக்கமுடியாத இந்த கட்டம் எல்லோருக்கும் எப்போதோ வரப்போவதுதான். ஆனால் மரணிக்கப் பேகாகின்றேன் இன்னும் சொற்ப நாட்கள்தான் வாழப்பேகின்றேன் எனத் தெரிந்துகொண்டு அந்த மரணத்தை எதிர்கொண்டது அவருக்கு சுகமான மரணமாக இருந்திருக்கலாம்! ஆனால் அவருடன் பழகியவர்களுக்கு இப்படியான ஒரு செய்தி இனிமேலும் தெரியவரக்கூடாது.

மரணம் என்பது பிறந்தவுடன் வரலாம். வயது முதிர்ந்தவுடன் வரலாம். ஆனால் என்றுமே இப்படியான இடைநடுவில் வருவது மிகுந்த துயரமே!

மீழாத் துயரத்தில் இருக்கும் அமரரின் குடும்பத்து உறவுகளுக்கும். நண்பர்களுக்கும் பிரியாலயம் குடும்பத்தின் கண்ணீர் அஞ்சலிகள்.

*பிரியாலயம் துரைஸ் குடும்பத்தினர்*

## புஸ்ப்பராஜனே!.....மொழி தமிழ் நேசனே!..........

பாசறைப் படிப்பினில் வீரம் அறிந்தவன்!
புண்ணி தேசத்தின் வடுதலை உணர்ந்தவன்!
மாணவர் அமைப்பினை மனமுவந்து ஏற்றவன்!
முட்டும் பகையினை முடித்திடத் துடித்தவன்!

எட்டும் நட்பு அனைத்தும ஏற்றாய்!
ஏற்றிய மனிதம் உண்மை என்றுரைத்தாய்!
வெட்டும் பகையின் கொட்டம் தகர்க்க
விடுதலை வீரனாய் வழிபல கண்டாய்!

பட்டும் அறிவு பைந்தமிழுக்கு என்றாய்!
பாசிச அரசின் பிதற்றலை அறிந்தாய்!
படித்த இளைஞரின் ஏமாற்றம் அறிந்தே
போராட்டம் உரிமையுள் புலரும் என்றாய்!

இளைஞர் பேரவை! மாணவர் பேரவை!
சகவாழ்வு அரசியல் வேண்டுமே என்றாய்!
கழைத்திடும் மனத்துடன் காலத்தை அழந்தே
கிடை உரிமை பெற்றிட முனைந்தாய்!

உந்தன் எழுத்தில் சாட்சியம் கண்டோம்!
உன்னையும் உணர்வையும் உயர்வாய்க் கண்ளேம்!
உந்தன் பிரிவால் உள்ளத்தால் உடைந்தோம்!
உந்தன் இடத்தினில் இனியாரும் இல்லை!




உரிமை கிடைக்கும்வரை உந்தன் ஆத்மா
உறங்காது என்பதே எந்தன் எண்ணம்!
தோழனே போய்வா! தோழன் சொல்கின்றேன்!
தேடியும் கிடைக்கா உந்தன் நட்புடன்.......

*சிவலிங்கம்-சிவபாலன்*

வண்ணை

www.tamilarangam.net






**5-3-2006ல் வெளியான ஆனந்த விகடன் சஞ்சிகையில் வெளியான அமரர் புஷ்பராஜா அவர்களின் செவ்வி**

"எப்போதும் மரணத்தின் நிழல் படிந்திருக்கும் ஈழத்தின் தெருவொன்றில் பிறந்தவன் நான். குழந்தைகளும், இளம்பெண்களும், முதியவர்களும் கொடூரமாகக் கொல்லப்படுவதைக் கண்ணெதிரே கண்டிருக்கிறேன். வாசலில் சாவை அமர்த்திவிட்டுதான் உள்ளே உறங்கச் செல்லுகிறார்கள் எம் மக்கள். செத்துச் செத்து வாழ்கிற எங்களுக்கு மரணம் புதிதில்லை. இதோ. இன்னும் மூன்று மாதம்தான் எனக்கு ஆயுள் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்காக நான் பயப்படவில்லை. வருத்தப்படவில்லை. ஆனால், ஒரு முக்கிய வேலை இருக்கிறது. அதற்கு இன்னும் எட்டு மாதம் நான் வாழ்ந்தாக வேண்டும். உயிர் வாழ்தலின் இறுதி முயற்சியாகத்தான் சென்னைக்கு வந்திருக்கிறேன்" என்கிறார் புஷ்பராஜா. ஈழத்தின் ஆயுதப் போராட்டத்தைத் துவக்கி வைத்த முன்னோடிகளில் ஒருவர். இப்போது அரசியல் தஞ்சமடைந்து பிரான்ஸில் வசிக்கிறார்.

"யாழ்ப்பாணம் மயிலிட்டிதான் என் சொந்த ஊர். எழுபதுகளின் துவக்கத்தில் சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைகளை எதிர்கொள்ள, ஈழத்தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நோக்கித் திரும்பிய காலம். சிங்கள ஆதிக்கத்தை எதிர்க்க அஹிம்சை உதவாது, ஆயுதம் தான் உதவும் என்று முடிவெடுத்து, அதுவரை நான் இருந்த தமிழ் அரசு

கட்சியிலிருந்து வி
பேரவை என்கிற
சிவக்குமாரன், சத்
நண்பர்களும் சே

ஈழ விடுதலைய
டத்தை முதன்
வைத்தது மாண
பின்னர், ஈழ மக்க
முன்னணியின்
போராளியாகவும்
காலகட்டத்தில்
இ.என்.டி.எல்.எ
புலிகள் என ஏ
ஈழத்தில் முளைத்

காக்கைகளுக்
விழித்தெழுவோம்
உண்மையான வி
இருந்த சிங்களவ
வோம். போர்ப் ப
குழுக்களும் ப
இந்தியாவுக்கும்
கும் ஆயுதம் கிடை
வட இந்தியாவி
பயிற்சி கொடுக்க
யத்தில் எங்களை
அழைத்துப்போக
வரத்து குறிப்பிட்ட
எல்லோரும் ஈழ
போராடினோம். ஏ
மற்ற ஆயுதக் கு
பற்றிய தத்துவ
தெளிவில்லாமல்
சகோதரக் கொ
போய் எங்களை

> 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்கிற நூலை எழுதியிருக்கிறேன். அடுத்ததாக இன்னும் இரண்டு நூல்களை எழுதலாம் என்று நினைத்திருந்தேன்.

எழுத விரும்புவதை எழுதலாம். சந்திக்க விரும்பும் நண்பர்களைச் சந்தித்து அளவளாவி மகிழலாம். ஆனால், என்ன ஒன்று... இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கப் போகிறோம் என்பதால், ஆசை கட்டுக்கடங்காமல் நீண்டு கொண்டே போகிறது. இத்தனை ஆசைகளும் இவ்வளவு நாள் எங்கே இருந்தன என்று தெரியவில்லை. இறுதித் தேர்வை எழுதும் மாணவன் போல் என்னை உணர்கிறேன்.

எழுதலாம் என்று அமர்ந்தால், சோர்வாக இருக்கிறது. ஆனாலும், நான் விடாப்பிடியாக எழுதிக்கொண்டு இருக்கிறேன்.

நம்பிக்கை ஊக்கம்
மருந்துகள் வாட்டி
நோயாளியாக இருக்
உணர்வே ஒரு படபடப்
எனக்கு ஏற்கெனவே
நடந்திருக்கிறது. இப்போ
அறுவை சிகிச்சை செய்
நடந்துகொண்டு இரு
என் உடம்பு ஒத்து
தெரியவில்லை.

ஈழத்தில் ஆயுதப்
துவங்கிவைத்தவர்களி
என்கிற முறையில், ஒ
மட்டும் சொல்ல விரும்

ஈழப் போராட்டத்
இன்றைக்குப் புலிகள்
முடியாத ராணுவமாக இ
வருங்காலத்தில் ஈழச்
பெரும் பொறுப்பு
சுமத்தப்பட்டு இருக்கிறது
ஈழ விடுதலையைச் சு
எதிர்காலத்தில் ஈழத்தி
சுதந்திரத்தையும் கொ
கடந்த காலத்தின் கசப்
விருந்து புலிகள் பாட
வேண்டும்.

## ஒரு அசரீரி..........

ஒரு வைத்தியன் ஒரு நாளில் தீருமென்றான்!
பாடி வைத்திய பலப்பத்தால் தீருமென்றான்!
கூளை வைத்தியன் சூரணத்தால் தீருமென்றான்!
எடப்பாடி வைத்தயன் எண்ணையால் தீருமென்றான்!
தேவி கோயில் வைத்தியன் திருநீறால் தீருமென்றான்!
மலையாளத்து மாந்திரீகன் மந்திரத்தால் தீருமென்றான்!
ஆகாச மாத்திரையை நீ அள்ளியுண்டு கண்டதென்ன!

*கவிஞர் மா. வரதராசனின்*
நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து

அஞ்சலி செய்வோம்
அஞ்சலி செய்வோம்
ஆறாத் துயருடன்
அஞ்சலி செய்வோம்

**வணணை**

www.tamilarangam.net



, தமிழ் மாணவர்
மைப்பை நானும்
ஸன் போன்ற சில
பு துவக்கினோம்.
ஆயுதப் போராட்
லாகத் துவக்கி
பேரவைதான்.
ரட்சிகர விடுதலை
றுப்பினராகவும்
ருந்தேன். அதே
ராஸ், டெலோ,
, தமிழ் புதிய
டு அமைப்புகள்
ர.
முன்பே நாங்கள்
எமது மக்களின்
லைக்கு எதிரியாக
ளைத் தேடி அலை
சிக்காக பல்வேறு
ஸ்தீனத்துக்கும்,
பின. எல்லோருக்
து. தமிழகத்திலும்,
ம எங்களுக்குப்
ட்டது. வேதாரண்
கொண்டுவிடவும்,
படகுப் போக்கு
ட்களில் இருந்தது.
விடுதலைக்காகப்
னும், நாங்களும்,
களும் விடுதலை
கோட்பாட்டில்
ருந்தோம். இது
மயில் கொண்டு
றுத்தியது.

கிறதென்றால்,
தைக்கின்றன.
றோம் என்கிற
ஏற்படுத்துகிறது.
பபாஸ் சர்ஜரி
மாற்றுக் கல்லீரல்
கான முயற்சிகள்
ன்றன. அதற்கு
க்குமா என்று

ாராட்டத்தைத்
ானும் ஒருவன்
ஒரு விஷயத்தை
றேன்.
பொறுத்தவரை,
ராலும் வெல்ல
கிறார்கள். இனி
கத்தின் மீதான
ளிகளின் மீது
றை அமைப்பாக
ம் புலிகள்தான்
அமைதியையும்
வெர வேண்டும்.
அனுபவங்களில்
கற்றுக்கொள்ள

எங்களுக்குள் முரண்பாடுகள் இருந்தன. வேறு வேறு குழுக்கள் வேறு வேறு தத்துவங்களைக் கொண்டு இருந்தன. ஆனால், அடிப்படைக் கொள்கை ஒன்றுதான்... அது, தமிழ் ஈழம் அடைவது!

எண்பதுகளில் தொடங்கி இன்று வரை ஈழத்தில் சகோதர யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் மட்டும் கிட்டத்தட்ட 6,000 பேர். சுடப்பட்டும், மின்சாரக் கம்பங்களில் தொங்கவிடப் பட்டும் கொலை செய்யப்பட்ட இந்தப் போராளிகளெல்லாம் யார்? சிங்களர்களா? இலங்கை ராணுவத்தினரா? இல்லை, சுதந்திரத தமிழ் ஈழத்துக்காகத் தங்களின் வீட்டை, சொந்தங்களைத் துறந்து, ஆயுதம் தரித்தவர்கள்!

ஈழத்துக் கவிஞர் சிவசேகரத்தின் கவிதை ஒன்று...

*துரோகி எனத் தீர்த்து*
*முன்னொரு நாள் சுட்ட வெடி*
*சுட்டவனைச் சுட்டது*
*சுடுமாறு ஆணை இட்டவனைச் சுட்டது*
*குற்றஞ் சாட்டியவனை*
*சாட்சி சொன்னவனை*
*தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது*
*தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது*
*சும்மா இருந்தவனையுஞ்*
*சுட்டது.....*


இப்படி ஒரு சூழலில்தான் நானும் கொலை செய்யப்படுவேன் என்று பயந்தேன். ஒன்று, என் எதிரிகளால். இன்னொன்று, ஆயுதம் தரித்த என் நண்பர்களால். 'இது கொலைகாரங்க பூமி ஆயிடுச்சு. நாம இனிமே இங்கே இருக்க வேண்டாம். வேற எங்காவது போயிடலாம்' என்று என் காதலி சொன்னாங்க. அதற்கு அடுத்த நாள், அதாவது 82-ம் ஆண்டு மே மாதம் திருமணம் செய்துகொண்டோம். என் உடன்பிறந்தவர்கள் ஒன்பது பேர். அழகான கூடு மாதிரி இருந்தது வீடு. அந்தக் கூட்டை



நானேதான் கலைத்துவிட்டு என் மனைவியோடு பிரான்ஸுக்கு வந்தேன். இதோ 24 ஆண்டுகளாகிவிட்டன.

உலகத்தின் எந்த மூலையில் சுற்றி அலைந்தாலும், தாயகக் கனவு என்னை அலைக்கழித்துக்கொண்டேதான் இருந்தது. தேவைக்கு அதிகமாகக் காசிருந்தால் குடிப்பேன். போதை, நிறைய விஷயங்களை மனந்திறந்து பேசவும், கூடிக் கதைக்கவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதாக இருந்தது. கிடைக்கிற வேலையெல்லாம் செய்தோம். ஈழத்தின் சாதிய சமூகம் எந்தெந்தத் தொழிலை எல்லாம் செய்யக் கூடாத தொழிலாக விலக்கி வைத்ததோ, அதையெல்லாம் செய்தோம்.

தாய் மண்ணைத் தொலைத்து, புதிய சூழலில், புதிய உறவுகளை நாங்கள்




ஈழத்தின் அருகில் இருந்து இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைக்க வேண்டிய இந்தியா, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறது. இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, இலங்கை பிரச்னையில் அமெரிக்கா தலையிட்டு, ஆக்ரமிக்க முயலும். எப்போதும் அந்நிய சக்திகளைவிட, ஈழப் பிரச்னையில் இந்தியா நேர்மையுடனும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் தலையிடுவதைத்தான் போராளிகள் விரும்புவார்கள். என் விருப்பமும் அதுதான்!" என்கிறார் புஷ்பராஜா.

கடைசியாக, புஷ்பராஜாவுக்கு மாற்றுக் கல்லீரல் பொருத்தும் முயற்சியையும் அவர் உடம்பு தாங்காது என்பதால் மருத்துவர்கள் கைவிட்டு, அவரது கடைசி நாட்களை சொந்த மண்ணிலேயே சென்று கழிக்கும்படி சொல்லிவிட்டார்கள்.

"எனக்கேது சொந்த மண்? நான் எங்கே செல்ல முடியும்? நாளை அமையவிருக்கும் தமிழ் ஈழத்தைக் காண நான் உயிரோடிருக்க மாட்டேன். நான் பிறந்த மண்ணே... நான் வாழ முடியாத மண்ணே... ஒரே ஒரு கேள்வி உன்னிடம்.. வெடி மருந்து வீச்சமில்லாத உன் தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என்று வரும் எம் மண்ணே?"

- டி அருள்எழிலன்.

படங்கள்: கே ராஜசேகரன்.

**எனது வருத்தமெல்லாம் எந்த மக்களின் விடுதலைக்காகப் போராடப் போகின்றேனம் எனப் புறப்பட்டோமோ அந்த மக்களை இழப்பதற்கு எதுவுமற்றும். தப்புவதற்கு வழியுமற்றும் போர் விரும்பிகள் மத்தியில் சிக்கிக் கடும் துயரம் புரியும் ஊமை மக்களாக பரிதவிக்க விட்டுவிட்டு நான் (நாம்) தப்பியோடி வந்துவிட்டேன் (டோம்) என்பதுதான்**

ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் பக்கம்.14

## நாளை உன் கனவு வெல்லும்.



பிறப்பும் இறப்பும் இயற்கைதான்
பிறப்பிலும் உயிருண்டு
இறப்பினும் இங்கு
உயிர் தோன்றும்!

இறப்பும் பிறப்பும் இயல்பாயிருக்க
இடைநடுவில் முறிமரமாய்
இறப்பது செற்கையன்றோ!?

இறப்பையே இறக்க
இறவா இயல்பாகி
இறப்பது எதுவோ அதுவே இறப்பு.
இறக்கிற இறப்பாக
உன் வயது இல்லை!

முறிப்பிற்கும் தறிப்பிற்கும்
ஆன இறப்புதனை
எங்ஙனம் இயற்கையென்போம்? —

இது
இறைவன் செய்த
கொடுமையன்றோ?

இலங்கையில் இனவாதப்பேய்
தலை தூக்கி நின்றபோது
விடுதலைப் போர் வேண்டி
விதை விதைத்தவர்களோடு —நீயும்
இணைந்து செய்த பணிகளெல்லாம்
மறந்திட முடியாதவைகள் -இதை
நல் மனங்களெல்லாம்
மனதில் கொள்ளும்
நாளை உன் கனவு வெல்லும்

உன் உடலம் மறைந்தாலும்
உன் உருவம் மறையாது
உன்னை நினைக்கயிலே
நெஞ்சுருகிப் போகிறதே!

இன்னொரு பிறப்பெடுத்தால்
சுதந்தரத்
தமிழ் மண்ணில் நீ நடப்பாய்.
நாளை உன் கனவு வெல்லும்

*வண்ணை*

"'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்கிற நூலை எழுதியிருக்கிறேன். அடுத்ததாக இன்னும் இரண்டு நூல்களை எழுதலாம் என்று நினைத்திருந்தேன்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஈழநாடு

# உள்ளதைச் சொல்வேன்!



அந்த செய்தியைக் கேட்டவுடன் துக்கம் நெஞ்சை அடைத்தது.

நண்பன் புஷ்பராஜாவுக்கு புற்று நோயாம்...

நம்பமுடியாத அந்தத் தகவலுடன் புஷ்பராஜாவை சந்திக்க முயன்றபோது, அவர் வைத்திய முயற்சிக்காக இந்தியா சென்றதாக அறிந்தேன்.

அதன் பின்னர் வெளிவந்த இந்திய வார சஞ்சிகையான ஆனந்த விகடனில் திரு. புஷ்பராஜா எழுதிய "விடைபெறக் காத்திருக்கிறேன்" என்ற துயரக் கட்டுரை என் கண்களைக் குளமாக்கியது.

திரு. புஷ்பராஜாவை நான் முதன் முதலாக சந்தித்தது ஒரு விடுதலை வீரனாக.

1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புஷ்பராஜாவை காவலூர் பொலிஸ் நிலையத்தில் சந்தித்தேன். அது அவர் எங்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராளியாக பிரபல்யமாகியிருந்த காலம். ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சி நடைபெற்ற அந்த காலகட்டத்தில் பாதுகாப்புக் கருதி தமிழீழப் போராளிகளும் காவல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பாதுகாப்புக் கருதி ஊர்கள் மாற்றப்பட்டு திரு. புஷ்பராஜா அவர்களும், மாவை சேனாதிராஜா அவர்களும் காவலூர் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். வெளியே, எங்கள் நண்பர்களுக்குள் போட்டி. யார் எப்போது அவர்களுக்கு சாப்பாடு கொடுப்பது என்று.

தடுத்து வைக்கப்பட்ட இரண்டாம் நாளை நான் தட்டிப் பறித்துக் கொண்டேன். அன்று அவர்களுக்கு 'கயல்' மீன் விருந்து கொடுத்தும் என் மனதிற்குத் திருப்தி கிடைக்கவில்லை.

எங்கள் கதாநாயகர்களாக இருந்த அந்தக் காலத்தை நினைத்துக் கண் கலங்குகின்றேன்.

பின்னர்... எத்தனையோ தடுமாற்றங்கள்... வழி தவறல்கள்... நண்பன் புஷ்பராஜாவும் நானும் துருவங்களாகத் திசை மாறிவிட்டோம். ஆனாலும், அந்த நாள் ஞாபகங்கள் அடிக்கடி வந்து நெஞ்சை உருக்கும். "புஷ்பராஜா போன்ற ஆரம்பகால போராளிகள் யதார்த்தத்தை உணரத் தவறிவிட்டார்களே" என்று மனம் வேதனை கொள்ளும்.

இன்றும் அந்த வேதனை... ஒரு போராளியின் பயணம் அர்த்தமற்றதாகி விடக் கூடாதே என்ற தவிப்பு....

'எனக்கேது சொந்த மண்? நான் எங்கே செல்ல முடியும்? நாளை அமையவிருக்கும் தமிழ் ஈழத்தைக் காண நான் உயிரோடிருக்க மாட்டேன். நான் பிறந்த மண்ணே... நான் வாழ முடியாத மண்ணே... ஒரே ஒரு கேள்வி உன்னிடம்... வெடி மருந்து வீச்சமில்லாத உன் தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என்று வரும் எம் மண்ணே?' என்று தவிக்கும்

"எனதருமை நண்பனே! எம் மனதை விட்டு நீ ஏன் வெளியே சென்றாய்...?"

"புஷ்பா! மீண்டும் வா! நண்பனாகவே திரும்பி வா!! விடுதலைப் போராளிக்கு மரணம் ஏது...? பொங்கி எழும் தமிழர் பக்கம் திரும்பி வா!! சரித்திரத்தை நீ எழுத எண்ணிய காலம் போகட்டும். சரித்திரம் உன்னை இனி எழுதட்டும்!"

- சந்திரன்



ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான சி. புஷ்பராஜா(54) இலங்கையின் வடகடலோரக் கிராமமான மயிலிட்டியில் பிறந்தவர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் 1969ம் ஆண்டில் இணைந்து ஈழ மக்களின் அரசியலிலும் பின்னர் தமிழ் மாணவர் பேரவையின் தீவிர செயற்பாட்டாளராகவும் இயங்கினார். தமிழ் பேசும் மக்களின் அரசியல்,விடுதலை முன்னெடுப்புகளில் தீவிர அக்கறையையும் பெரும் தாக்கத்தையும் உருவாக்கி ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கு வழிவகுத்த தமிழ் இளைஞர் பேரவையை ஆரம்பித்து அதன் முதலாவது தலைவராகவும் இயங்கியவர்.

ஈழத்து மிதவாத அரசியல் தலைமையை நிராகரித்து தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீவிரவாதத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அதன் செயலாளர் நாயகமாகவும் இயங்கியவர்.

1974 - 1980ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் பெரும் சிறைகளான யாழ்ப்பாணம்,கொழும்பு வெலிக்கடை, கொழும்பு விளக்கமறியல் ஆகியவற்றிலும் பனாகொடா இராணுவத் தடுப்பு முகாமிலும் பல ஆண்டுகள் சிறை இருந்தவர்

பெரியாரிய, இடதுசாரிக் கருத்துகளில் மிக்க ஈடுபாடும் அக்கறையும் கொண்ட இவர் இன்று பிரான்சில் அரசியல் அகதியாக வாழ்கிறார். புகலிட இலக்கியச் செயற்பாடுகளோடு தன்னை ஈடுபடுத்தியும் வருகிறார்.

ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்னும் நூலின் கடைசிப் பக்கம்

*உரிமைப் போராட்டமாக இருந்த எமது போராட்டம் படிப்படியாக விடுதலைப் போராட்டமாக மாறி இப் போராட்டத்தின் தலைமையை இளைஞர்களின் கைகளில் எடுத்த முன்னோடிகளில் நானும் ஒருவன்.*

*காலத்தின் கட்டாயம் நானும் இளைஞர்களின் ஒரு தலைவனாக எனது பொறுப்பை எனது கடமையை எனது சக்திக்குட்பட்டவரை நிறைவேற்றி இருக்கின்றேன்.*

*எமது போராட்டத்தை வரலாற்றின் திருப்புமுனைக்கு கொண்டு சென்ற இரண்டு இளைஞர் இயக்கங்களுக்கு நான் தலைமை தாங்கியுள்ளேன். அது இளைஞர்கள் தங்களை வழிநடத்திச் செல்லுமாறு எனக்குத் தந்த உரிமையாகக் கருதி நான் செயல்பட்டிருக்கின்றேன்.*

*இலங்கையில் ஒரு முனையில் இருந்து மறு முனைவரை குறுக்கவும் நெடுக்கவும் நான் அலைந்து இளைஞர்களை ஒன்று திரட்டி பின்னால் வந்த இயக்கங்களுக்கு கதவுகளைத் திறந்து வைத்தேன் என்றால் இது ஒன்றும் மறுப்பதற்குரிய விடயமல்ல.*

*(ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் பக்கம் -11)*

**வண்ணை**

www.tamilarangam.net



# வாடா மலராய்...



நண்பர்களுக்கு நண்பனாய்! உறவுகளுக்கு உயிராய்! சமூக சிந்தனை நிறைந்த முற்போக்கு வாதியாய்! வாழ்ந்து வந்த ஒரு நல்ல உள்ளத்தின் மறைவு எங்கள் எல்லோருக்கும் வேதனையானதே.

இன்றும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கின்றது ஓர் தடவை தங்களை நான் பாரீஸ் மருத்துவமனையில் குசலம் விசாரிக்க வந்தவேளை "முகத்தார் அங்கிள் மனிதன் பிறக்கும்போது தன்னுடன் கொண்டு வருவது சேமித்து வைப்பது மரணம் ஒன்றுதான். இது இயற்கையின் நியதி. வந்தது தெரியும் போவது எப்போ? யாருக்குமே தெரியாது" என அன்று தாங்கள் புன்னகையுடன் கூறியதை இன்று இரைமீட்டிப் பார்க்கின்றேன்.

முடிவின் விழிம்பில் என்ற அர்த்தத்தில் தங்கள் அஸ்த்தமனம் பற்றி தீர்க்க தரிசனமாக ஒரு சில வாரங்களுக்கு முன்னர் தமிழகத்துச் சஞ்சிகையொன்றில் தாங்கள் எழுதிய கட்டுரை எனக்கு வியப்பாகவே இருக்கின்றது.

தங்களது ஆத்ம சாந்திக்காகவும் தங்களது பிரிவால் துயருறும் உறவுகளுக்காகவும் எனது ஆழ்ந்த பிராத்தனைகள்.

அமரரே! தம்பி புஸ்ப்பராஜா தாங்கள் மரணிக்கவில்லை!! எங்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

நேசமுள்ள

முகத்தார் யேசுரட்ணம்

## கண்ணீர் அஞ்சலி......



நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் போதே மரணங்களும் நிச்சயக்கப்பட்டு விடுகின்றன. ஆனாலும் நம்முடன் கூட இருந்தவர்கள் நெருங்கிப் பழகியவர்கள்!
எம்மை விட்டுப் பிரிகின்றபோது அந்தத் துன்பம..: வேதனை... மனதை நெருடச் செய்கின்றது.

எமது மண்ணில் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஆயுத அரக்கனின் கோரத் தாண்டவத்தால் தினமும் நம் உடன் பிறப்புக்களை பலி கொடுத்துக் கொண்டிருக்கும் நாம் மரணங்களை சாதாரணமாகவே எதிர் கொள்ள பழகியவர்களாககவே மாறியிருக்கின்றோம்

இவ்வாறு மாறியிருக்கும் நமக்கே தாங்கிக்கொள்ள முடியாதிருக்கும் சோக நிகழ்வு நண்பன் புஸ்ப்பராஜன் அவர்களின் மரணமாகும்.

மீளாத் துயரத்தில் வீழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினக்கு எனது இதயம் கனத்த கண்ணீர் அஞ்சலிகள்.

மு.சிவதாஸ்
அறிவாலயம் புத்தகசாலை

## மறக்கமுடியவில்லை!..........

சுமார் ஒரு ஐந்து வருடங்களுக்கு முன்னால்......

லண்டனில் வாழ்ந்து வரும் எனது நண்பர் டாக்டர் இந்திரகுமார் அவர்கள் பாரீஸ் வந்திருந்த சமயம் தான் அப்பொழுதி எழுதிக்கொண்டிருந்த ஒரு நூல்க்குரிய சில ஆவணப் புகைப்படங்களைப் பெறுவதற்காக அமரர் புஸ்ப்பராஜாவை சந்திப்பதற்கு நேரம் கேட்டிருந்தார் புஸ்ப்பராஜாவும் நேரத்தை ஒதுக்கிக் கொடுத்திருந்தார். திடீரென இந்திரகுமார் அவர்களுக்கு ஈடீ தொலைக்காட்சி நிலையத்திற்கு செல்லவேண்டி ஏற்பட்டதால் புஸ்ப்பராஜாவிடம் சொல்லமுடியாமலும் போய்விட்டது செல்லமுடியாலும் போய்விட்டது!.

டாக:டர் அவர்கள் புஸ்ப்பராஜா அவர்களிடம் மறுநாள் மீண்டும் சந்திப்பதற்கு நேரம் கேட்டார் புஸ்ப்பராஜா கோபத்துடன் மறுத்துவிட்டார்! நான் சமாதானப்படுத்த முயன்றேன் என்னுடனும் சற்று காரமாகவே பேசிய புஸ்ப்பராஜா அவர்கள் கூறியது "வன்னை அவருக்கு எது முக்கியம் என்பது தெரிந்திருக்க வேண்டும்! அது மாத்திரமல்ல எனது நேரத்தின் பெறுமதியும் அவருக்குத் தெரியவில்லை! இனி அவரை சந்திப்பதற்கு நான் தயாராக இல்லை எனக் கூறினார்".

புஸ்ப்பராஜாவினது கோமமும் அதில் உள்ள நியாயமும் எனக்குப்புரிந்ததால் நானும் மேற்கொண்டு பேசவில்லை.

இது புஸ்ப்பராஜாவிடம் உள்ள குணாதிசயங்களில ஒன்று தன்னுடன் பழகுபவர்கள் எந்த உயர்ந்த இடத்தில் இருப்பவரானாலும் தன்னை மதிப்பவர்களையே அவரும் மதிப்பார். அதேபோல தானும் அப்படித்தான் பழகிக் கொள்வார். இப்படியாக இவரிடம் உள்ள உயர்ந்த பல குணாதிசயங்களை என்னால் மறக்கமுடியவில்லை.

(இப்படிக் கூறிய புஸ்ப்பராஜா அவர்கள் அடுத்து இரண்டுமணி நேரத்தில் நானும் இந்துிரகுமார் அவர்களும் நண்பர் சிவதாஸ் அவர்களின் இல்லத்தில் இருக்கின்றோம் என்பதை அறிந்து தானாகவே அங்கு தேடி வந்து அவருக்கு தேவையான புகைப்படங்களைக் கொடுத்து உதவியது வேறு கதை.)

வன்னை தெய்வம்

www.tamilarangam.net



# மனிதம் நிறைந்த ஒரு மனிதனை இழந்துவிட்டோம்!

*'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு'*

நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

குறள் 336 (நிலையாமை)

என்னும் வள்ளுவப் பெருந்தகை அவர்களின் குறளின் பொருளை அறிந்திருக்கின்றேன். அதனை முழுமையாக உணர்ந்ததில்லை!

ஆனால் கடந்த வியாழக்கிழமை இரவு சுமார் ஏழு மணியளவில் திரு புஸ்ப்பராஜா அவர்கள் சார்சலில் உள்ள முடி திருத்தகத்திற்கு முடி திருத்துவதற்காக வந்திருந்தார் அங்கு அவரைச் சந்தித்த நான் சுமார் அரை மணி நேரம் வரையில் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன் அப்பொழுது அவர் வழமைபோல பல விடயங்களையும் கதைத்துவிட்டு பின்னர் தான் மறுநாள் மருத்துவமனைக்கு செல்லவிருப்பதாக கூறிவிட்டுச் சென்றார். ஆனால் மறுநாளோ அவர் காலமாகிவிட்டார் என்ற செய்தி எனது உள்ளத்தில் இடியாக இறங்கியது!

எனக்கு இப்பொழுதுதான் நான் முதலில் கூறிய வள்ளுவப் பெருந்தகையின் குறளின் ஆத்மரீதியான தத்துவத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது.


பரந்த நோக்கம், விரிந்த மனப்பான்மை, தன்னலமற்ற சமூகநல சிந்தனை, கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம், அத்துடன் மரணத்தின் சவால்களை பல தடவைகள் சந்தித்த மன உறுதியும் ஓர்மமும் அவரது தனித்துவமான சொத்துக்களாகும்.

ஏறத்தாள இரண்டு சகாப்தங்களாக இவரோடு பழகிய காலங்களில் நாங்கள் இருவரும் அரசியல் தவிர்ந்த பல விடயங்களை அலசி ஆராய்ந்திருக்கின்றோம். மாற்றுக் கருத்தையும் மனக்கசப்பின்றி உள்வாங்கி காய்தல் உவத்தல் இன்றி ஆராயும் மனப் பக்குவமும் முதிர்ச்சியும் இவரிடம் காணக்கூடியாதாக இருந்தது.

மரியாதை என்பது கொடுத்துப் பெறுவது என்பதனை மிக இறுக்கமாக் கடைப்பிடித்தவர் அமரர் புஸ்ப்பராஜா அவர்கள்.

நேற்றைய பொழுது கழிந்துவிட்டது! நாளை என்பது இன்னமும் விடியவில்லை! இன்று ஏன் கவலைப்படவேண்டும்? என்ற உமர்க்கயத்தின் தத்துவத்தை அவ்வப்பொழுது கடைப்பிடித்தும் வாழ்ந்தவர் என்பதும் இவரது வாக்குமூலம்.

வாசித்தல் மனிதனை முழுமையாக்குகின்றது என்பார்கள். நான் முதன் முதலாக புஸ்ப்பராஜா அவர்களின் இல்லத்திற்கு சென்றபோது அவரது நூலகத்தைப் பார்வையிட்டேன். வியந்தேன்! நான் படிக்கின்ற காலத்தில் கன்னிமாரா நூலகத்தின்குள் நுளைந்த உணர்வே எனக்கு அப்பொழுது ஏற்பட்டது.



ஆகவே இவர் உண்மையாகவே ஒரு முழுமையான மனிதராக இருக்கவேண்டும் என்பதனை அப்பொழுதெது கணித்துக் கொண்டேன் அது பொய்யாகவில்லை.

கால ஓட்டத்தின் யதார்த்தங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதிலும் அக்கறையாக இருந்தவர் என்பதனையும் அவ் அப்பொழுது அவரின் இறுதிக்காலங்களில் உரையாடுகின்றபோது என்னால் அறியக்கூடியதாக இருந்தது.

இவர் கொண்டிருந்த இலட்சியமும் ஆசையும் நிறைவேறுவதற்கு முன்னதாகவே காலன் இவரைக் கவர்ந்து சென்றது கொடுமையிலும் கொடுமை. சுருங்கக் கூறின் ஒரு மனிதம் நிறைந்த மனிதனை இழந்துவிட்டோமே என்ற ஆதங்கமே விஞ்சி நிற்கின்றது.

தம்பி புஸ்ப்பராஜாவை இழந்து துயருறும் அவருடைய குடும்பத்தினர் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஆகியவர்களோடு நானும் இணைந்துகொள்கின்றேன்

இந்த நல்ல மனிதரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*சி. காராளபிள்ளை*

ஒரு நாடு தனது தேவையைப் பொறுத்தே இன்னொரு நாட்டின் அரசியல்ப் பிரச்சனையில தலையிடுவதும், இன்னொரு நாட்டின் போராளிகளின் அமைப்பிற்கு ஆதரவளிப்பதும், அல்லது போராளிகளின் அமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், ஒருநாட்டைப் பிரித்துக்கொள்ள உதவுவதும், என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

(ஈழப் போராட்டத்தில் என து சாட்சியம் -பக்கம் 507)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்